விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஐப்பசி: 4 ற. ஆகிர் பிறை: 1 இதழ்: 179
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 21-10-1990

உலக கிறிஸ்தவ திருச்சபை:

## குண்டுமாரி பொழிவதற்கு வன்மையான கண்டனம்!

(பிலிப்பைன்ஸ்)
விடுதலைப் புலிகளுக்கும், அரச படையினருக்குமிடையே தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதல்களின்போது, அரச விமானப் படையினர் மனிதாபிமானமற்ற முறையில், பொதுமக்கள் வாழும் பகுதிகளில் குண்டுமாரி பொழிவது மிகவும் கண்டனத்திற்குரியது என்று உலக

(4-ம் பக்கம் பார்க்க)

மல்லாகத்தில்

## விமானத் தாக்குதல் பெண் உட்பட 7 பேர் காயம்

### வீடுகள், கடைகள் பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)
மல்லாகத்தில் நேற்றுஇடம் பெற்றபயங்கரஅவ்ரோவிமான தாக்குதலில் பெண் உட்பட 7 பேர் படுகாயமடைந்தனர். ஐந்து கடைகள், வீடுகள் பலத்த சேதமடைந்தன.
அவ்ரோ விமானம் மேலே வட்டமிட்ட போது மக்கள் பதுங்குகுழிகளில் தஞ்சம் அடைந்ததால் உயிர்ச்சேதம்

(4-ம் பக்கம் பார்க்க)

கட்டுவனில் நேற்று

# புலிகள் அதிரடித் தாக்குதல்!

# இரு 'செயின்புளொக்' தகர்ப்பு!!

## இரு அதிகாரிகள் உட்பட படையினர் பலர் பலி

[யாழ்ப்பாணம்]
**ஸ்ரீலங்கா அரசபடையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் நேற்று நடாத்திய அதிரடித்தாக்குதலில் இரண்டு 'செயின் புளொக்' பீரங்கி வாகனங்கள் தகர்த்தெறியப்பட்டன. உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட பல இராணுவத்தினர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர்.**

மயிலிட்டி, கட்டுவன் பகுதியில் இருந்து இராணுவத்தினர் நேற்றுக்காலை 7-30 மணிக்கு காங்கேசன்துறைப் பக்கமாக முன்னேற முயன்ற போது, கட்டுவன் சந்தியில் வைத்து விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்து அதிரடித்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல்களில் 'செயின் புளொக்'' வாகனங்கள் இரண்டினை விடுதலைப் புலிகள் தகர்த்தெறிந்தனர். இதில் வந்த பல இராணுவத் தினர்கொல்லப்பட்டதுடன் இந்த அணிக்குத் தலைமை தாங்கிவந்த

(4ம் பக்கம் பார்க்க)

படையினர் சூட்டுக்கு

## ஆடு மாடுகளை பார்க்க சென்றவர் காயம்

(யாழ்ப்பாணம்)
இடம்பெயர்ந்து சென்ற வயோதிபர் ஒருவர் விடுதலைப் புலிகள் தடுத்தும் கேளாது ஆடுகளை பார்க்க சென்ற போது இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி

(4-ம் பக்கம் பார்க்க)

## சுழற்சி முறை மின்சாரம் மீண்டும் தடைப்பட்டுள்ளது!

(யாழ்ப்பாணம்)
எண்ணிறந்த சிரமங்களின் மத்தியிலும் யாழ். நகரின் சில பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த சுழற்சிமுறை மின்சா

(4-ம் பக்கம் பார்க்க)

புலிப் போராளியின்

## மரணச்சடங்கில் ஹெலி தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவத்தினரின் நடவடிக்கையில் வீரமரணமடைந்த சதிஷின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட பொதுமக்களை நோக்கி ஹெலி நேற்றுப்பகல்தாக்குதலை நடத்தியது.

பலதடவைகள் வட்டமிட்டு விட்டுத் தாக்குதலை நடத்திய ஹெலிமீண்டும்பலாலி நோக்கி திரும்பியது.

இத்தாக்குதலினால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லையாயினும் மக்கள் மத்தியில் பதற்றம் காணப்பட்டது. நீர்வேலியிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

கிளிநொச்சியில்

## வங்கிகள் இயங்குகின்றன

(கிளிநொச்சி)
கிளிநொச்சி நகரிலுள்ள இலங்கை வங்கி கிளையும், மக்கள் வங்கி கிளையும் மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளன.

கிளிநொச்சி நகரிலுள்ள பல்வேறு அரசாங்கத் திணைக்கள அலுவலகங்களும் ஊழியர்கள் வருகையைத் தொடர்ந்து மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளன.
(153)

வலி. வடக்கு, தெற்கிலிருந்து

## பெருமளவில் மக்கள் இடம் பெயர்ந்தனர்!

(காங்கேசன்துறை)
வலி. வடக்கு, வலி. தெற்கு பகுதிகளிலிருந்து வெளியேறிய பெருந்தொகையான மக்கள் ஆலயங்களிலும்: பாடசாலைகளிலும் தஞ்சமடைந்து வருகின்றனர்.

வலி வடக்குப் பகுதியில் இருந்து 90 வீதமான மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர். வலி: தெற்குப் பகுதியிலும்; குப்பிளான், ஏழாலை, சுன்னுகம், மல்லாகம் பகுதிகளிலிருந்து

(4ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண மக்களை காப்பாற்ற

## உயிரை அர்ப்பணித்த கிழக்கு போராளிகளுக்கு இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
''சிங்கள இராணுவத்தின் கவசவாகனங்கள் பலவற்றை சிதைத்து இராணுவ சிப்பாய்களை பெருமளவில் கொன்ற மேஜர் அன்ரனி யாழ்ப்பாண மக்களைக் காப்பாற்றுவதற்காக பாலாலியில் நடந்த மோதலில் தன்னுயிரை தியாகம் செய்துள்ளார்.''

இவ்வாறு யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் ஈச்சமோட்டையில் நேற்று நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் கூறினர்.

அவர்மேலும் கூறியதாவது வாழ்வா-சாவா என்ற நிலையில் நாம் இன்று இருக்கின்றோம். எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு சகல மக்களும் தங்கள் பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மூத்த உறுப்பினர்

(4-ம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணை விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி சந்தைப்பகுதியில் மண்ணெண்ணை விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒரு போத்தல் 15 ரூபாவாக விற்கப்படுகின்றது.
(152)

தெல்லிப்பளையில்

## வீடுபார்க்கச்சென்ற இருவருக்கு சூடு!

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பளை. பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து சென்றவர்களில் இருவர் மீண்டும் தமது வீடுகளை பார்த்து பொருள்களை எடுக்க அங்கு சென்றபோது இராணுவத்

(4-ம் பக்கம் பார்க்க)

## பீரங்கித்தாக்குதல் பல வீடுகள் சேதம்

[காங்கேசன்துறை]
காங்கேசன்துறை கடற்பகுதியிலிருந்து நேற்று அதிகாலை ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகளால் அளவெட்டி, இளவாலை, கீரிமலை, பன்னாலை பகுதிகளில் பல வீடுகள் சேதமடைந்தன.

[4-ம் பக்கம் பார்க்க]

## உணவு, மருந்துபோல்

# கோட்டையில் குடிநீர் பெறுவதும்

# பெரும் பிரச்னையாக இருந்துள்ளது!

யாழ். கோட்டைக்குள் புலிகளின் சுற்றி வளைப்பினால் முடங்கிக் கிடந்த இராணுவத்தினர் உணவு, மருந்து வகைகள் மட்டுமன்றி குடிநீருக்கும் பெரும் பிரச்னைப்பட்டிருப்பார்கள் என்பது அங்குள்ள கிணறுகளைப் பார்வையிட்டபோது தெரியவந்தது.

பொலிஸ் அதிபர் விடுதிக்குப் பின்பக்கத்திலுள்ள கிணறு மிக ஆளமானது. எட்டிப்பார்த்தபோது கஞ்சல் குப்பை மட்டுமன்றி காகம் ஒன்று இறந்து கிடந்தது. அங்குள்ள ஏழெட்டுகிணறுகளை எட்டிப்பார்த்தேன். எல்லாம் துப்பரவின்றி காகங்கள் செத்துக்கிடந்தன.

## யாழ். கோட்டைக்குள் 3 மணி நேரம் - 6

புலிகளின் 'ஷெல்' வீச்சினால் கட்டடங்கள் சிதறி அதன் இடிபாடுகளும் கிணறுகளில் காணப்பட்டன. சிறைச்சாலைக்குள் ஆலயத்திற்கு சமீபத்திலுள்ள கிணறு கொஞ்சம் சுத்தமாக காணப்பட்டது, அது இராணுவத்தினர் சென்றபின் பாவிப்புக்காக இறைத்து சுத்தம் செய்யப்பட்டதோ தெரியவில்லை.

### விமானதாக்குதல்

ஜூன் மாதம் 29ம் தேதி காலை 12 ரகவிமானம் நகரப் பகுதியை தாக்கியபோது வேம்படி கல்லூரிக்கு சமீபமாகவுள்ள தண்ணீர் குழாய் நிலத்துக்கடியில் பலத்த சேதமடைந்தது. அதன் பின்னர் கோட்டைக் குழாய்நீர் விநியோகம் தடைப்பட்டது. இதனால் குடிநீருக்கு அவர்கள் பிரச்னைப்பட்டிருப்பார்கள் எனத் தெரிகிறது.

பொலிஸ் அதிபர் விடுதிக்கு அருகில் உள்ள கட்டடத்திற்கு சென்று பார்த்தோம். பொலிஸ் சப்பாத்து வெற்று பெட்டிகள் நூற்றுக்கணக்கில் ஒரு அறையில் காணப்பட்டது. அதனைக் கடந்து பின் விறுந்தைக்கு செல்கின்றோம்.

அங்கு பொலிஸ் நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள், தஜ்தாவேஜுகள் காணப்பட்டன. முறைப்பாட்டு கொப்பிகளும் இருந்தன. ஒன்றை எடுத்து பார்வையிட்டேன். எல்லாம் ஆங்கிலத்தில் இருந்தன. எந்தப்புகாரும் தமிழில் பதிவுசெய்யப்படவில்லை. பிரதிகள் கூட தமிழில் இல்லை.

தமிழ் பகுதிகளில் தமிழில் புகார்கள் பதிவுசெய்யப்படும் என்று அடிக்கடி அரசினால் தெரிவிக்கப்பட்டது. அதற்கென சில சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன, ஆனால் நடைமுறையில் எதுவுமே இல்லை. தமிழ்மொழி உபயோகம் வெறும்கண்துடைப்பு என்பதை இது எடுத்து காட்டியது.

அந்தப் புத்தகத்தில் தமிழுக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை.

அந்த விடுதிக்குள் பழுதடைந்த நிலையில் ஒரு மோட்டார் சைக்கிளும் காணப்பட்டது. அங்கிருந்து வெளியேறி வரும் வழியில் நிலத்தில் ஒரு இரும்புப் பெட்டி உடைந்த நிலையில் காணப்பட்டது. அந்தப் பெட்டிக்குக் கீழும், அருகிலும் பணக் குவியல் காணப்பட்டது.

### பணக் குவியல்

வெள்ளியிலான ஒரு சதம், இரண்டு சத நாணயங்கள் நூற்றுக்கும் அதிகம் நிலத்தில் காணப்பட்டன. சிலவற்றை எடுத்துப் பார்த்தேன். புழக்கத்திற்கு வராத புதிய நாணயங்களாக இருந்தது. அந்த இரும்புப் பெட்டிக்குள் அந்த நாணயங்கள் இருந்திருக்க வேண்டும்.

கீழே குனிந்து அந்த இரும்புப் பெட்டியைக் கவனித்தேன். உள் அறைகளும் காணப்பட்டன. அதனைத் திறந்து பார்த்தேன். எதனையும் காணவில்லை. அதற்கு அருகில் நூற்றுக்கு மேற்பட்ட துப்பாக்கிகள் எரிந்த நிலையில் காணப்பட்டன.

அந்தக் கட்டடத்தின் பின் பகுதியில் வான்கள், லொறிகள், கார்கள் பல சேதம் அடைந்த நிலையில் காணப்பட்டன. இலக்கத் தகடுகளைக் காணவில்லை.

அப்பால் சென்றபோது விகாரை எதிர்ப்பட்டது. பெரிய அரசமரத்திற்கு அருகில் பீடமொன்று அமைக்கப்பட்டு, புத்தர் சிலை காணப்பட்டது. ஆனால் தலையைக் காணவில்லை.

அப்பகுதியில் 'அவ்ரோ' போட்ட உணவுப் பொதிகள் விழுந்த அடையாளம் தெரிந்தது.

நூற்றுக்கு மேற்பட்ட கிறீம் கிறுக்கர் பிஸ்கட் உறை

**கா. யோகநாதன்**

கள் ஒரு இடத்தில் காணப்பட்டன.

பதுங்கு குழிகளில் பல நாட்கள் முடங்கிக் கிடந்து பசியால் துடித்த படையினர், பொதி உள்ளே விழுந்ததைப் பார்த்து ஓடோடி வந்து, விழுந்த இடத்திலேயே பிஸ்கட் பெட்டிகளை உடைத்துச் சாப்பிட்டிருக்கவேண்டும். அதனால்தான் ஒரே இடத்தில் அவ்வளவு தொகையான பிஸ்கட் வெற்றுப் பெட்டிகள் காணப்பட்டிருக்க வேண்டும்.

விகாரைக்கு அப்பால் நிலத்தில் 'பிங்' நிறத்தில் வேலைப்பாடு அமைந்த ஒரு கறுப்புச் சாறி காணப்பட்டது. எடுத்து விரித்துப் பார்த்ததில் அது ஒரு சாறி என்பதை உறுதி செய்துகொண்டேன். அதற்கு அப்பால் ஒரு வெள்ளை நிற 'ஃபெட் சீற்'றும் காணப்பட்டது. கோட்டையில் இருந்து வெளியேறும்போது இவற்றை எல்லாம் அச்சத்தில் தவறவிட்டுச் சென்றிருக்கவேண்டும்.

கொள்ளையடித்த சாறியோ அல்லது கடையில் கொள்வனவு செய்த சாறியோ தெரியவில்லை. மற்றொரு நீல நிறச் சாறி ஒன்று அடுப்படிக்கு அருகில் காணப்பட்டது. அந்த அடுப்படியில் உள்ள உணவுப் பொருட்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்தன. அடுப்படியும் எரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்பட்டது.

## கிணற்றில் அசுத்தம் குழாய்நீருக்குத் தடை

உணவு களஞ்சிய அறை பிற்பகுதியில் இருந்தது. உணவுப் பொருட்கள், அரைகுறையாக அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன. எதுவுமே ஒழுங்காக இல்லை. இதுகூட அவர்கள் இறுதிநேரத்தில் அவசரத்தில் வெளியேறியுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தியது.

தண்ணீர் பௌசர் ஒன்றும் எரிந்தநிலையில் காணப்பட்டது. மற்றும் சில வாகனங்களும் எரிக்கப்பட்டிருந்தது. ஒரு வாகனத்திற்கு அருகில் சிங்கள அரசியல்வாதி ஒருவரின் பெரிய அளவு கலர் படம் ஒன்று இரண்டாகக் கிழிக்கப்பட்டு ஒரு பகுதி மட்டும் காணப்பட்டது. அது ஒரு கலண்டராகத் தெரியவில்லை. பிரேம் போட்டு மாட்டக்கூடிய படம்போல்தான் காணப்பட்டது.

கோட்டையை விட்டு ஓடிச் செல்லும்போது யாரோ, இந்தப் படத்தை தவறவிட்டிருக்கவேண்டும். அந்தப் படத்தின் மறுபகுதியை அவ்விடத்தில் காணவில்லை.

மேல் கொத்தளம், உள் மைதானம், சென்றிகள் எங்கு பார்த்தாலும் உணவுப் பொருட்கள், பாவனைப் பொருட்கள், உடைகள் யாவும் அங்குமிங்குமாக சிதறிக் காணப்பட்டன. எதுவுமே ஒழுங்காக இல்லை.

அமைதிப்படையினர் இக் கோட்டையில் தங்கியிருந்து சென்றபின்னர்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், எல்லாப் பொருட்களும் சமீபத்தில் பாவிக்கத்தவையாகவே காணப்பட்டன.

ஜூன் 11ம் தேதி புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் போர் தொடங்கியபின் கோட்டைக்குள் எதுவுமே ஒழுங்காக இருக்கவில்லை எனத் தெரிகிறது.

அநேகமாக இரவு பகல் எந்நேரமும் படையினர், பதுங்குகுழியே தஞ்சமென இருந்திருக்கிறார்கள் கொத்தளத்தில் உள்ள சென்றிகளில் மட்டும் அந்தந்தநேரம் சிலர் கடமையில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த நிலையில் நான்கு மாதங்களாக கோட்டையில் எல்லாமே சீர்குலைந்து, நிலகுலைந்தே இருந்துள்ளன என்பது அங்குள்ளவற்றை பார்த்தபோதே தெளிவாக தெரிந்தது.

இங்கிருந்து சிறைச்சாலை பகுதிக்கு செல்கின்றோம்.

(தொடரும்)

---

## திருமலைக்கு

# கடமைக்குத் திரும்பாதவர்க்கு பதவி விலகல் கடிதம்

(புங்குடுதீவு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக வேலைக்கு திரும்பாத திருகோணமலை இலங்கை மின்சாரசபை ஊழியருக்கு பதவி விலகல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த யூன் மாதம் இடம் பெயர்ந்து வந்த இவ் ஊழியருக்கு இதுவரையில் சம்பளமும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கான எந்த ஒரு நிவாரணங்களும் கிடைக்கவில்லையென கவலையடைந்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் போக்குவரத்து வசதிகளும், பாதுகாப்பும் இல்லாத நிலையில் எப்படி வேலைக்கு சமூகம் கொடுப்பதென ஏங்கித்தவிக்கின்றார்கள். (101)

---

## தீவுப்பகுதியில்

# பொருட்கள் விலை அதிகளவில் உயர்வு

(புங்குடுதீவு)

கடந்த சில தினங்களாக தீவுப் பகுதியில் காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்து வருவதினால் புங்குடுதீவு பகுதிகளிலுள்ள ஒருசில கடைகளிலும் அங்காடி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் சிலரும் பொருட்களின் விலைகளை கண்டபடி நாளுக்கு நாள் கூட்டி விற்பனை செய்துவருவதாக பொது மக்கள் புகார் தெரிவித்து வருகின்றார்கள்.

போக்குவரத்து பிரச்னையால் பொருள்கள் வராத நிலையில்தான் இப்படியாக விற்பனை செய்கின்றோம் என்று வியாபாரிகள் கூறுகின்றார்கள்.

தேங்காய், மண்எண்ணெ, மரக்கறி, அரிசி மா, போன்ற பொருட்களே இப்படியாக விலைகூட்டி விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது; (101)

---

## மின் விநியோகம் தாமதமாகும்

(அச்சுவேலி)

அச்சுவேலி பஸ் நிலையத்தில் உள்ள மின்மாற்றியில்(ரான்ஸ் போர்மர்) இருந்த ஒயில் களவாடப்பட்டிருப்பதால் அச்சுவேலிப் பகுதிக்கான மின்சார விநியோகித்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அச்சுவேலிப்பகுதி மின்சார விநியோகத்திற்கு வசதியாக திருத்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ள போதிலும் ரான்ஸ்போமரில் இருந்து ஒயில் களவாடப்பட்டதால் மின்சார விநியோகம் செய்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என அச்சுவேலிப் பகுதி மின் அத்தியட்சகர் திரு. எஸ். கிருஷ்ணதாசன் தெரிவித்தார். (74)

---

## அவருக்கும் இதே நிலைதான்

(வடமராட்சி)

திருமலைக்கல்விப்பணிப் பாளர் வல்லைவெளியூடாக கால் நடையாக பருத்தித்துறை சென்றடைந்தார்.

முன்னாள் யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளரும் இன்னாள் திருமலை கல்விப்பணிப் பாளருமான செல்வி. ரி. பெரியதம்பி வல்லைவெளியைக் கால்நடையாக நேற்று காலை 7-45 மணியளவில் நடந்து சென்றார்.

---

## "ஆடம்பரங்களைக் கைவிட்டு ஆக்கபூர்வமான பணியில் ஈடுபடுங்கள்"

(காங்கேசன்துறை)

''இன்றைய காலகட்டத்தில் அச்சத்தைப் போக்கி தெய்வ நம்பிக்கையுடன் முடிந்த அளவில் சிக்கனமாக வாழ நாம் பழகிக்கொள்ள வேண்டும். ஆடம்பரங்களை விடுத்து ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடவேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்ற தீபாவளி தினவிழாவில் கலந்துரையாற்றிய செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; ''நாம் இன்று பல்வேறு வகையாலும் கஷ்டமுற்று வாழ்க்கையிலே விரக்தியடையும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் காந்தி அடிகள் அசையாதகடவுள் நம்பிக்கையுடன் செயல்பட்டு அச்சத்தை விட்டெறிந்து வெற்றி கொண்டதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

உலகில் எந்த மக்களும் அடையாத துன்பத்தை நாம் அடைந்தாலும் உறுதியுடன் செயல்படவேண்டும். எமது மக்களின் சகிப்புத்தன்மையை உலகமே இன்று பார்த்து வியந்து நிற்கிறது.

இன்றைய நிலையில் தீபாவளி என்று ஆடம்பரங்களை விடுத்து முடிந்த அளவில் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ளவேண்டும். (86)

---

## பொறுப்பாளர் வேண்டுகோள்

(புங்குடுதீவு)

மண்டைதீவு அல்லைப்பிட்டி பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால்புதைத்து வைக்கப்பட்டுள்ள பெருந்தொகையான மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ள போதிலும் அப்பகுதிகளில் நடமாடிவரும் பொதுமக்கள் மிகக்கவனமாக நடந்துகொள்ள வேண்டுமென புங்குடுதீவு பிரதேசபொறுப்பாளச் திரு. மங்களேஸ் அப்பகுதி மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். (101)

---

## நல்லின தென்னை நாற்று

(அச்சுவேலி)

அச்சுவேலி தென்னை நாற்று மேடை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட தென்னம் பிள்ளைகள் பொதுமக்களுக்கு நியாய விலையில் விற்கப்படுகின்றது.

குறைந்த காலத்தில் பயன் தரக்கூடிய கலப்பின நாற்று மற்றும் நல்ல இன தென்னம் பிள்ளைகள் விற்பனை செய்யப்படுகிறது.

தென்னை நாற்றுப் பண்ணை அச்சுவேலி பழைய பட்டுப் பூச்சி தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (74)

---


**வரி விளம்பரம்**

### விற்பனைக்கு

மரம் பல வளர்த்து மழை வளம் பெருக்குவோம். கால்நடைகளுக்குச் சிறந்த தீவனம் இப்பில் இப்பில் ரூபா 2-00 அஞ்சல் முத்திரை அனுப்பி இப்பில் இப்பில் விதைகளைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற்- யாழ்ப்பாணம். (எ-831)

## பாகிஸ்தானுக்கு
# ஆஸி. போர் விமானங்கள்; இந்தியா பலத்த கண்டனம்

(மெல்பேர்ன்)

பாகிஸ்தானுக்கு அவுஸ்திரேலியா மிராஜ் போர்விமானங்களை விற்பனை செய்ய முடிவு செய்திருப்பதை இந்தியா கண்டித்துள்ளது.

நட்புநாடொன்று இம்மாதிரியான முடிவை எடுத்திருப்பது கவலைதருவதாக புதுடில்லியில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

கடந்தமாதம் இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்ட அவுஸ்திரேலியா வெளியுறவு அமைச்சர், பாகிஸ்தானுக்கு போர் விமானங்களை விற்பனை செய்யும் எண்ணம் இல்லையென உறுதியளித்திருந்தும் தற்போது முடிவை மாற்றியிருப்பது கவலைதருவதாக அவ் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

# அடுத்த ஆண்டு முதல் புதிய கல்வித் திட்டம்

(கொழும்பு)

அடுத்தாண்டுமுதல் ஒன்பதாம் தரத்திற்கு வகுப்பேற்றப்படும் சகல மாணவர்களும் கனிஷ்ட தொழில் நுட்பதராதர பரீட்சைக்குதோற்ற வேண்டும்.

இதற்கான புதிய கல்வித் திட்டம் அமுல் செய்யப்பட்டிருப்பதாக கல்வியமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் புதிய கல்வித்திட்டம் பற்றி விளக்குகையில் இதனைத் தெரிவித்தார். [ச]

## இலங்கை வரும்
# தமிழோசை சங்கருக்கு தமிழ்பகுதிக்கு செல்ல தடை!

(லண்டன்)

உத்தியோக பூர்வவிஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவிருக்கும் லண்டன் பி. பி. ஸி சங்கருக்கு தமிழ்பிரதேசங்களுக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதனால் கொழும்பில் தங்கியிருக்கும் திரு. சங்கர் அங்கிருந்து கொண்டு தமிழோசை நேயர்களைச் சந்திக்கவிருப்பதாகத் தெரிய வருகிறது.

இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கான தமது ஒரு மாத காலசுற்றுப் பயணத்தை திரு. சங்கர் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளார்.

தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கும் திரு. சங்கர் நவம்பர் 3-ம் திகதி இலங்கைக்கு வருகை தருவார். (ச)

## பலாலி மோதலில்
# வீரமரணமடைந்தஜெனிக்கு கைதடி மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த கைதடியைச் சேர்ந்த ஜெனி (எஸ். ஜெகதீஸ்வரன்) யின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் கைதடியில் நடைபெற்றது.

இவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கைதடியிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் பொதுஅமைப்புகள் ஆகியவற்றின் கட்டங்களிலும் வீதிகள் தோறும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

சிற்றூரவைகள் மற்றும் கைதடி நாவற்குழி மக்கள் சார்பில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

## நீர்வேலியில் கந்தசஷ்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி செல்லக் கதிர்காமசுவாமி கோவில் கந்தசஷ்டி உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 24-ம் திகதி சூரன்போர் உற்சவமும், 25-ம் திகதி திருக்கல்யாண உ சவமும் நடைபெறும்.

## 'பைக்கட் பலகாரம்'

(புலோலி)

வடமராட்சி உழைக்கும் மகளிர் மன்றத்தினால் உள்ளூர் உணவுப்பொருள்களிலிருந்து பல்வேறுவகையான பலகாரம் தயாரிக்கப்பட்டு; பைக்கட்டுகளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (61)

## ஓயில் திருட்டு தொடர்வதால்
# சில தினத்தில் மின்சாரம் நிறுத்தப்படும் அபாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைப்பகுதிகளிலுள்ள ரான்ஸ் போமர்களில் ஓயில் திருடப்பட்டுள்ளதால், சகலபகுதிகளுக்குமான மின்விநியோகம் சிலதினங்களில் பூரணமாக நின்றுவிடுமென மின்சாரசபை அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

கன்னாதிட்டி, கச்சேரி, ரான்போமர்களில் ஓயில் இருப்பதை அவதானித்த மின்சாரசபை ஊழியர்கள் மறுநாள் மின்சாரம் வழங்க சென்றபோது 'ஓயில்' திருடப்பட்டுள்ளதால் அப்பகுதிகளுக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

அராலிவீதி, ஆ. ஜி. பில்டிங், தட்டாதெரு ரான்ஸ்போமர்களில் மட்டும் தற்போது ஓயில் இருப்பதால் இப்பகுதிகளுக்கு 6 மணித்தியாலங்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்படுகிறது.

கோட்டை, அசோக்ஹோட்டல், தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் சீ-நோர் ரான்ஸ்போமர்கள் பலத்த சேதத்துக்குள்லாகியுள்ளதால் இப்பகுதிகளுக்கு உடனடியாக மின்சார விநியோகம் நடைபெறமாட்டாது

கன்னாதிட்டி, மனோகரா, ஐந்துசந்தி றக்கா வீதி, கச்சேரி கொன்வென்ட் குருநகர் பாஷையூர்: உப்புக்குளம், புங்கங்குளம், வீடமைப்புத்திட்டம், பலாலிவீதி, கலட்டி சிவப்பிரகாசம் வீதி அரியாலை ரான்ஸ் போமர்களிலும் ஓயில்திருடப்பட்டுள்ளதால் மின்சாரம் வழங்கப்படமாட்டாது.

33 கே. வி. மின்சாரத்தை பதினொரு கே.வி. மின்சாரமாக மற்றும் பரமேஸ்வரா, ஒட்டுமடம் ரான்ஸ்போமர்களிலும் ஓயில் திருடப்பட்டுள்ளது. (ச)

## உப்புக்கு தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் உப்புக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையால் உப்பின் விலை என்றுமில்லாதவாறு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இப் பகுதியிலுள்ள கடைகளில் ஒரு கிலோ உப்பு விலை ஐந்து ரூபாவாக விற்பனைசெய்யப்படுகிறது. (101)

## இராசி பலன்

21 - 10 - 1990
ஞாயிற்றுக்கிழமை

திருதியை பி. இ. 2-13 வரை, விசாகம் பி. ப. 12-38 வரை, மரணயோகம், இராகு காலம் 4-32 முதல் 6-02வரை, நல்லநேரம் காலை 9-02 முதல் 10-32 வரை.

மேடம்: நினைத்ததை சாதித்தல், காரிய வெற்றி, குடும்ப மகிழ்ச்சி, தொழில்பாராட்டு.

இடபம்: புதிய சிந்தனை, கள்வர் தொல்லை, வாக்குப் பலிதம், குடும்ப விரோதம், பணவரவு.

மிதுனம்; ஏமாற்றம், தாய் வழி விரோதம், தொழில் குறைவு புத்திரர் மகிழ்ச்சி, கடன்வசூல்.

கடகம்; பழிச்சொல் கேட்டல், கருத்து வேற்றுமை, குடும்ப மனஸ்தாபம் அகால போஜசனம்.

சிங்கம்: அரசசன் மானம், தொழில் முயற்சி, குடும்ப மகிழ்ச்சி, நண்பர்உதவி.

கன்னி: பகைவர் தொல்லை, அந்நியவாசம், மனக்குழறல், அதிகாரிகள் தொல்லை.

துலாம்: கார்ரிய பலிதம், உறவினர் வருகை, பயணம், வீட்டில் சுபகாரியம், புகழ்.

விருச்சிகம்: தொழில் பிணக்கு, பணச் செலவு, குடும்ப சச்சரவு, இனப்பகை, சோம்பல்.

தனுசு: கடிதஉறவு, திருமணப்பேச்சுக்கள், மறைமுக எதிர்ப்பு, குடும்பசுகம், வெற்றி.

மகரம்; தொழில்குளறுபடி, பணமூலமான கவலை, தைரிய மிகுதி, வீட்டில் ரோகம்.

கும்பம்: கருத்துமோதல், பயணங்களால் துன்பம், தொழில் போட்டி, சகோதர பகை.

மீனம்: காரியதாமம், குடும்பத்தில் பூசல், தந்தையர் உதவி, மனவேதனை, தனிமை.

ஜோஸ்யர்.

## "வீரம் சிறந்த வேங்கைகளின்
# நினைவுச் சின்னங்களை நிறுவுவது தமிழ் மக்கள் கடமையாகும்"

(வட்டுக்கோட்டை)

"இன்று எமது கிராமத்தைச் சேர்ந்த வீர வேங்கை கப்டன் கனகசபையின் மூன்றுவது நினைவு தினமாகும். இத்தினத்தில் இதுவரை பெயரிடப்படாத இவ்வீதிக்கு 'கப்டன் கனகசபை வீதி' எனப் பெயரிட்டு. இன்று முதல் அதை நடைமுறைப்படுத்துகின்றோம். இப்படியான வீரம் செறிந்த வேங்கைகளின் நினைவையொட்டி அழியாத-ஞாபகார்த்த நினைவுச் சின்னங்களை அமைப்பது ஒவ்வொரு தமிழ் மக்களது கடமையாகும்."

சங்கானை மேற்கு சிற்றூரவைத் தலைவர் திரு. க. இராசலிங்கம், கப்டன் கனகசபையின் பெயரில் நடைபெற்ற வீதித் திறப்பு விழாவில் தலைமையுரை நிகழ்த்தும்போது மேற்கண்டவாறு கூறினார்.

"1997 அக்டோபர் 17ம் திகதி இந்திய இராணுவத்துடன் சண்டிலிப்பாயில் நடந்த நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த 'கப்டன்கனகசபை' (ஆறுமுகம் பாக்கியராஜா) யின் மூன்றுவது நினைவு தினத்தை முன்னிட்டு 'கப்டன் கனகசபை வீதி' திறப்புவிழா நடைபெற்றது.

கப்டன் கனகசபையின் தாயார் திருமதி ஆறுமுகம், 'கப்டன் கனகசபை வீதி' என்னும் பெயரைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இவ்விழாவில் சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். இரத்தினம், அராலி வள்ளியம்மை வித்தியாசாலை அதிபர் திரு. ஆ. ஜெயராஜா, திரு. எஸ். சபாரத்தினம் ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினர். 139)

## சிற்றூரவை அலுவலகம்

(வட்டுக்கோட்டை)

சங்கானை தெற்கு சிற்றூரவை அலுவலகம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

சங்கானை மானிப்பாய் வீதியில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டது.

சிற்றூரவைத் தலைவர் திரு. ரி. கோவிந்தசாமியின் தலைமையில் இடம்பெற்ற இத்திறப்பு விழாவில் சிற்றூரவை உறுப்பினர்களும் பொதுமக்களும் பெருந்தொகையாகக் கலந்துகொண்டனர். (139)

## மின் விநியோகம் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

சுழற்சி முறையில் வழங்கப்பட்டுவரும் மின்சாரவிநியோகம் பண்டத்தரிப்பு பகுதிக்கு கிடைக்கவில்லை.

இங்குள்ள மின்மாற்றியில் ஹெவி டீசல் திருடப்பட்டுள்ளதால் மின் விநியோகம் வழங்கப்படவில்லை என்றும், ஹெவி டீசல் கிடைக்கும் பட்சத்தில் மின்விநியோகம் சாத்தியமாகும் என்றும் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலக மின்சாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதேவேளை மாதகல். சில்லாலை ஆகிய இடங்களுக்கு மின்விநியோகம் சுழற்சிமுறையில் கிடைத்து வருகின்றது. (72)

## ரசாயன பசளை வழங்க ஏற்பாடு

(வேலணை)

வேலணைகமநலச்சேவை நிலையத்தினர் எதிவரும் காலபோக வெள்ளாண்மையினை மேற்கொள்ளவிருக்கும் விவசாயிகளுக்குத் தேவையான ரசாயன பசளை வகைகளை தனது சேவை நிலையத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

## புங்குடுதீவில் கந்தஷஷ்டி விழா

[புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடுகந்தசுவாமி தேவஸ்தானத்தில் கந்தஷஷ்டி விழா தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

ஆறு நாட்கள் வரை நடைபெற்றுவரும் இவ்விழாவில் இறுதிநாளாளான 25ம் திகதி சண்முக அர்ச்சனையும் விசேட பூஷையாக நடைபெறவிருக்கிறது. (101)

## வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை திஸ்ஸ விகாரை இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த பற்றீசியாவுக்கு (தெய்வமொழி, முள்ளியவளை முல்லைத்தீவு) விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்

## விமானத் தாக்குலால் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களினாலும் ஷெல் தாக்குதலினாலும் தமது இருப்பிடங்களைவிட்டு மல்லாகம், சுன்னாகம் பகுதிகளைச்சேர்ந்த இருநூறுக்கும் அதிகமான குடும்பங்கள், இருபாலைப் பகுதியில் அகதிகளாக தஞ்சம்புகுந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் இருபாலை தமிழ்கலவன் பாடசாலையிலும், உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். (வி)

## நவம்பர் 1ம் தேதி முதல்
# கிளிநொச்சி கச்சேரி பழைய இடத்தில் இயங்கும்

(கிளிநொச்சி)

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் கிளிநொச்சிக் கச்சேரி கிளிநொச்சி நகரிலுள்ள அரசாங்க செயலகக் கட்டிடத்தில் இயங்க உள்ளது.

தற்போது வட்டக்கச்சியில் மேற்படி செயலகம் தற்காலிகமாக இயங்கிவருகிறது.

சேதமடைந்த கிளிநொச்சி அரசாங்க செயலகக் கட்டிடங்களைத் திருத்தியமைப்பதற்கு 8 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கித் தருமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரைக் கேட்டுள்ளார்.

சேதமடைந்த கிளிநொச்சி அரசாங்க செயலகக் கட்டிடங்களில் திருத்தக்கூடிய பகுதிகள் தற்காலிகமாகத் திருத்த வேலைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. (153)

# சேமலாபநிதிக்கு பதிலாக சமூக பாதுகாப்பு ஓய்வூதியம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாபநிதிக்குப் பதிலாக சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கான நிதி தொழிலாளர்களிடமிருந்து திரட்டப்படும்.

இத்திட்டத்தின்படி வயோதிபம் காரணமாக ஒருவர் தொடர்ந்து வேலைசெய்யமுடியாதிருப்பதால் அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

வேலைசெய்யும் பொழுது இத்திட்டத்திலுள்ளவர் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்திற்கு இறந்தவரின் ஓய்வூதியம் வழங்கப்படும்.

# தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

இந்நேர்முகப் பரீட்சைக்கு 24,000 தொண்டர் ஆசிரியர்கள் தோற்றவுள்ளார்கள்.

இப் பரீட்சையில் 12,000 தொண்டர் ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

### யாழ்ப்பாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. தேவர் கூறியதாவது:

பலாலி இராணுவம் யாழ் நகருக்குள் வராமல் தடுப்பதற்கு தம் உயிர்களை துச்சமென மதித்து வெளிமாவட்ட இளைஞர்கள் போராடிவருகின்றார்கள். இன்று யாழ்மண்ணை மீட்பதற்காக தம் உயிர்களை தியாகம் செய்த மேஜர் அன்ரனி கல்முனையைச் சேர்ந்தவர். இதே வரிசையில் வீரவேங்கை நிஸாரும், வீராங்கனை ஆர்த்தியும் மட்டுநகரைச் சேர்ந்தவர்கள்.

இரண்டு லட்சம் இளைஞர்களைக்கொண்ட யாழ் நகர இளைஞர்கள் வீதிகளில் நின்று வேடிக்கை பார்க்கின்றார்கள். யாழ் நகர மண்ணைக் காப்பதற்கு வீட்டுக்கொரு இளைஞர் முன்வரவேண்டும்.

பலாலியில் வீரமரணம் அடைந்த மேஜர் அன்ரனி நிஸார், ஆர்த்தி ஆகியோரின் பூத உடல்கள் நேற்று முழுவதும் ஈச்சமோட்டை சன சமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பிற்பகல் 3 மணிக்கு பாஷையூர் சிற்றூரவைத் தலைவர் திரு. சச்சிதானந்தம் தலைமையில் மேற்படி சனசமூக நிலைய முன்றலில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வட்டவைத் தலைவர் கணபதிப்பிள்ளை, கல்முனையைச் சேர்ந்த திரு. சுந்தரலிங்கம் அரியாலை சிற்றூரவைத் தலைவர் திரு. பாலசுந்தரம், சுண்டிக்குழி சிற்றூரவைத் தலைவர் சிறில் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

மேற்படி கூட்டம் ஆயிரக்கணக்கான பொது மக்கள் முன்னிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது திடீரென வானத்தில் ஹெலியொன்று வட்டமிட்டு நோட்டம் பார்த்தது. ஆனால் பொதுமக்கள் அனைவரும் எதுவித சலனமும் அடையாது அதே இடத்தில் அசையாது நின்றது குறிப்பிடத்தக்கது. (வி)

### வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலுள்ள ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் வெளியேற முயன்றபோது அவர்களுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த பெண்புலி ஆர்த்தி (கோமதி ஆரையம்பதி காத்தான்குடி) க்கு வீர வணக்கங்களை விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under nmber B/100306/81.

### இன்று 3-வது நினைவு தினம்

(யாழ்ப்பபணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமைபுரிந்த 21 ஊழியர்கள் அமைதிப்படையினரால்கடமைநேரத்தில் சுட்டு கொல்லப்பட்ட 3வது நினைவு தினம் இன்றாகும்.

''அன்றைய தினம் தம் உயிரைத் துச்சமென மதித்து மக்களுக்காக கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களை அமைதிகாக்க வந்த இந்தியப் படையினர் சுட்டுக்கொன்ற இத் தினத்தை நாம் ஆழ்ந்த கவலையுடன் நினைவு கூருவோம்'' என்று யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

### வீடுகளைப்பார்க்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி))

தினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தனர்.

நேற்று தெல்லிப்பளையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வல்லிபுரம் பாலசிங்கம் (வயது 34), சின்னவன் சௌந்தரராசன் (வயது-22) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (56)

### பீரங்கித் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் மேற்படி பகுதிகளிலிருந்து ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்து அயற்கிராமங்களுக்கு சென்றுள்ளனர்.

மழை பெய்துகொண்டிருந்த போதும் குழந்தைகளுடன் நனைந்தபடி இவர்கள் சென்றதைக் காணமுடிந்தது. [86]

### வலி வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி

ஏராளமான மக்கள் வெளியேறியுள்ளனர்.

இவர்கள் வலி. மேற்குப்பகுதியிலும், இணுவில், தாவடி, கோண்டாவில், கொக்குவில் பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள், ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர். திடீர் பதற்ற நிலையால் உடுத்த உடையுடன் வெளியேறிய இம்மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (86)

### மல்லாகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் ஏற்படவில்லை.

இவ்விமான தாக்குதலை தொடர்ந்து அப்பகுதியில் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்,

நேற்று காலையில் ''வை 12'' விமானமும் அதையடுத்து 1 மணியளவில் அவ்ரோ விமானமும் பின்னர் பொம்மர் விமானங்களும், பிற்பகல் 1 மணியளவில் மீண்டும் அவ்ரோ விமானமும் குண்டுத் தாக்குதலை நடத்தின.

ஆனால் வழமைக்கு மாறாக இன்று விமானங்கள் வீசிய குண்டுகள் பல வெடிக்கவில்லை. கடும் மழை காரணமாக நிலத்தில் ஈரலிப்பு இருந்ததால் அவை வெடிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது கடையில் வேலைசெய்பவர்களான செல்வநாயகம் சுரேன் [வயது 16], குருநகர். செல்வநாயகம் டியான் [வயது 14] குருநகர், சுப்பிரமணியம் [வயது) 25] மல்லாகம், கருணாநிதி வயது 24] மல்லாகம், சதீஸ் [வயது 16] அச்சுவேலி, ஜீவா (வயது 16) அளவெட்டி, ந பாக்கியம் [வயது 47] ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (56)

# 2199 குடும்பங்களுக்கு ஜனசக்தி பத்திரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு 2199 குடும்பங்களின் ஜனசக்திப் பத்திர கார்டும். உணவு முத்திரைகளும் கொழும்பில் இருந்து கிளிநொச்சி அரச அதிபர் மூலம் கொண்டுவரப்பட்டு அதற்குரிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தித் திட்டம் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (153)

### இன்று கொடுப்பனவு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் பணிபுரியும் வெளிக்கள ஊழியர்கள் தமது கொடுப்பனவுகளை இன்று முதல் மானிப்பாய் யாழ். செஞ்சிலுவைச் சங்கக் கிளையிலும், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் தமது கொடுப்பனவுகளை சங்கானை வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

# பலாலி மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறமுற்பட்ட இராணுவத்தினருடன் கடந்த மூன்றுநாட்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய கடும்மோதலில் 2 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

வீரமரணமடைந்தவர்கள் விபரம்: விக்ரர் (புத்தூர்), ஷெல்டன் (நாவாந்துறை), ஐயன் (புத்தூர்), நீர்வேலிப் பொறுப்பாளர் ரகுபதி (பருத்தித்துறை), திஷோபன் (இருபாலை), நெல்சன் (பூநகரி), ரகீம் (சாவகச்சேரி), கந்தையா (கரவெட்டி), தமிழ்செல்வன் (மன்னார்), நஸார், ரகு (அளவெட்டி), மரியதாஸ் (வல்வெட்டித்துறை), அனுஷன் (தெல்லிப்பழை), சதிஸ் (நீர்வேலி), செ[illegible]வம் (பருத்தித்துறை), சுகந்தன் (முல்லைத்தீவு), அமுதன் (உரும்பராய்), மூவின் (இளவாலை), சேர்ணட் (நாவாந்துறை), சீனன் (வல்வெட்டித்துறை), பெண் போராளிபற்றீஷியா (முல்லைத்தீவு, ஆர்த்தி (ஆரையம்பதி), மேஜர் அன்ரனி (கல்முனை) முன்னாள் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர்), சின்னமணி (உருப்பராய்). (வி)

### படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தார்.

கட்டுவன் ஊரங்குணைஎன்ற இடத்தில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது

இச்சம்பவத்தில் ஊரங்குணையைச் சேர்ந்த பொ. சின்னத்துரை (வயது-70) என்ற வயோதிபரே படுகாயமடைந்தவராவார். காயமடைந்தவர் மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### உலக கிறிஸ்தவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவ திருச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்துமக்களின் திருநாளான தீபாவளிப் பண்டிகைத் தினத்தினை முன்னிட்டு, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன வாழ்த்துச் செய்தியை அனுப்பிய அதேவேளையில் யாழ் குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து, யாழ். குடாநாடு முழுவதும் பரவலான குண்டு, ஷெல், பீரங்கித் தாக்குதல்களை மேற்கொள்ள அரசபடையினருக்கு உத்தரவு இட்டிருந்தது சொல்லுக்கும், செயலுக்கும் முரண்பட்டு அரசு இயங்குவதையே எடுத்துக்காட்டுகிறது' என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளையில் நேற்று முன் தினம்இடம்பெற்ற பொம்பர் தாக்குதலில் படுகாயமடைந்த வல்லிபுரம் செல்லம்மா (வயது 65) யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று பரணமானார்,

இச்சம்பவத்தில் மரணமானவர் தொகை இவருடன் 7 ஆக அதிகரித்துள்ளது. [56]

### மினி பஸ் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கும், வவுனியாவுக்குமிடையில் மினிபஸ் சேவை நடைபெறுகின்றது. (153)

### மீண்டும் மின்சாரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மீண்டும் மின்சார விநியோகம் நடைபெற்று வருகிறது. (ச)

### குண்டுவீச்சுக்கு பெண் போராளி வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை, மாவிட்டபுரம் பகுதிகளில் பொம்மர் நடாத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் பற்றீஸியா என்ற பெண்போராளி வீரமரணமடைந்தார்.

பொதுமக்கள் வாழும் இப்பகுதிகளில் தொடர்ந்து கண்மூடித்தனமாக நடாத்திய பொம்மர் குண்டு வீச்சுக்களுக்கு பச்சிளம் குழந்தைஉட்பட நான்கு பொதுமக்கள் ஸ்தலத்திலேயே பலியாகினர். [வி]

### சுழற்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரம் குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்களினால் மீண்டும்தடைப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதல் காரணமாக ஏவப்பட்டுவரும் ஷெல்களும், பொழியப்பட்டுவரும் குண்டுகளும், சுன்னாகத்திலிருந்து யாழ்நகருக்குவரும் மின்னிணைப்புக்களுக்கு பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளதால் தொடர்ந்து சுழற்சிமுறை மின்சாரம் வழங்கமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் விதித்துள்ள ஊரடங்குச்சட்டமும், பலாலியிலிருந்து கண்மூடித்தனமாக நடாத்தப்படும், பீரங்கி ஷெல் தாக்குதல்களுக்கும் அஞ்சி, மின்சாரசபை ஊழியர்கள் கடமைக்கு செல்லமுடியாது இருப்பதனால், பழுதடைந்த மின்னிணைப்புக்களை திருத்தியமைக்கமுடியாத அவலமும் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (வி)

### கட்டுவனில் நேற்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உயரதிகாரிகள் இருவரும் கொல்லப்பட்டனர்.

இதேவேளையில் பொம்மர், அவ்ரோ, வை. 12 ரக விமானங்கள் இராணுவத்தினருக்கு உதவிக்கு வந்தபோதும், விடுதலைப்புலிகளின் சாதுரியமான தாக்குதல்களினால் இராணுவத்தினர் முன்னேறமுடியாது தடுக்கப்பட்டனர். இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை மயிலிட்டிப் பகுதிகளில் கடும்மோதல் நடைபெற்று வருகிறது.

கடந்த ஆறுநாட்களாக நடந்த மோதல்களில் ஸ்ரீலங்கா அரசதரப்பில் இரு உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட 18 பேர் பலியாகியுள்ளனர். 145 படையினர் படுகாயம் அடைந்துள்ளனர்.

புலிகள் தரப்பில் 24போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். (வி)